செ.வெ.எண்.54 நாள்.21.12.2017.

## பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் போலி மருத்துவர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்து வருவதாக பல்வேறு புகார்களின் மூலம் தெரிய வருகிறது. சமீபத்தில் இரு போலி மருத்துவர்கள் பிடிபட்டுள்ளனர். எனவே இப்போலி மருத்துவர்களை கண்டுபிடிக்க சிறப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தங்கள் பகுதியில் போலி மருத்துவர் யாரேனும் இருந்தால் திருநெல்வேலி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலக தொலைபேசி எண்: 04622 -577788, தென்காசி இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலக தொலைபேசி எண்: 04633–280707 மற்றும் மாவட்ட ஆட்சியரின் 'Call Your Collector' தொலைபேசி எண் 9786566111 மூலம் தொடர்பு கொண்டு பொது மக்கள் தகவலை தெரிவிக்கலாம். பொது மக்கள் போலி மருத்துவர்களிடம் சிகிச்சை எடுத்துக் கொள்வதை தவிர்க்கவும். அவ்வாறு சிகிச்சை எடுப்பதால் உண்மையான நோய் கண்டறியப்படாமல் போய் இறப்புகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.